47வது நினைவு நாள்

பெரியார் சிலைக்கு மு.க.ஸ்டாலின் மரியாதை

கி.வீரமணி, வைகோ, திருமாவளவனும் அஞ்சலி

சென்னை, டிச.25: பெரியாரின் 47வது நினைவுநாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பெரியாரின் 47வது நினைவுநாளை முன்னிட்டு சென்னை அண்ணா சாலையில் உள்ள அவரது சிலைக்கு நேற்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரது உருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, டி.கே.எஸ்.இளங்கோவன் எம்பி, கலாநிதி வீராசாமி எம்பி, சென்னை மாவட்ட செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், மாதவரம் சுதர்சனம், மயிலை த.வேலு, இளைய அருணா, சிற்றரசு, எம்எல்ஏக்கள் ரங்கநாதன், தாயகம் கவி, ரவிச்சந்திரன், பகுதி செயலாளர் மதன் மோகன், வர்த்தகர் அணி துணை செயலாளர் வி.பி.மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, ராஜா அன்பழகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தனது முகநூல் பக்கத்தில் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:

சுருண்டு கிடந்த தமிழினத்துக்கு சுயமரியாதைச் சூட்டைக்கிளப்பிய பகுத்தறிவுச் சூரியன் தந்தை பெரியாரின் 47வது நினைவுநாள் (இன்று) சமூக அடிமைத்தனம் தொடரும் வரை - ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் வரை - பெண்ணடிமைத்தனம் மறையாதவரை பெரியார் நித்தமும் நினைவு கூரப்படுவார். அவர் ஏற்றிய சுடரை அணையாமல் காப்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல வேப்பேரி பெரியார் திடலில் உள்ள பெரியார் நினைவிடத்தில் மதிமுக பொது செயலாளர் வைகோ, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி மலர்வளையம் வைத்து புகழஞ்சலி செலுத்தினார். அப்போது மதிமுக துணை பொதுசெயலாளர் மல்லை சத்யா, மாவட்ட செயலாளர்கள் கழககுமார், ஜீவன், சிறுபான்மை பிரிவு மாநில செயலாளர் முராத் புகாரி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அண்ணா சாலையில் பெரியார் சிலைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது துணை பொது செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி, முதன்மை செயலாளர் உஞ்சை அரசன், காஞ்சி பார்வேந்தன், மாவட்ட செயலாளர் இரா.செல்வம், செல்லதுரை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதேபோல பல்வேறு கட்சி தலைவர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

► பெரியார் நினைவுநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலை சிம்சனில் உள்ள அவரது சிலைக்கு கீழ் வைக்கப்பட்ட உருவப்படத்திற்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில், துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்எல்ஏக்கள் மா.சுப்பிரமணியன், மாதவரம் சுதர்சனம், ப.ரங்கநாதன், தாயகம் கவி, மாவட்ட பொறுப்பாளர்கள் சிற்றரசு, மயிலை வேலு, பகுதி செயலாளர் மதன் மோகன்.

இந்து கடவுளை அவமதித்ததாக

கமல்ஹாசன் மீது போலீசில் புகார்

சென்னை, டிச.25: சென்னையில் சமீபத்தில் நடந்த மக்கள் நீதி மையம் கட்சியின் மகளிரணி கூட்டத்தில், கமல்ஹாசன், இந்து கடவுளை அவமதித்து பேசியதால் அவர் மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொருக்குப்பேட்டையை சேர்ந்த ஆர்டிஐ செல்வம் நேற்று ஆர்கே நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

போலீசார், அந்த புகாரை பெற்று விசாரித்து வருகின்றனர். செல்வம் கடந்த வாரம் ஆர்.கே.நகர் தொகுதி எம்எல்ஏ டிடிவி தினகரனை காணவில்லை, கண்டுபிடித்து தாருங்கள் என்று போலீசில் புகார் அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில்களை நிர்வகிக்க வசதியாக புதிதாக உருவாக்கப்பட்ட

9 இணை ஆணையர் மண்டலங்களின் எல்லை வரையறை

கமிஷனர் பிரபாகர் உத்தரவு

சென்னை, டிச.25: கோயில்களை நிர்வகிக்க வசதியாக புதிதாக உருவாக்கப்பட்ட 9 இணை ஆணையர் மண்டலங்களின் எல்லையை வரையறுத்து கமிஷனர் பிரபாகர் உத்தரவிட்டுள்ளார்.

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 44,121 ஆயிரம் கோயில்கள் உள்ளன. இவை நிர்வாக அடிப்படையில் பட்டியல் சேர்ந்த கோயில்கள் என்றும், பட்டியல் சேராத கோயில்கள் எனவும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டுக்கு ₹10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வருவாய் வரும் கோயில்கள் எல்லாம் பட்டியலில் சேர்ந்த கோயில் என்றும், ₹10 ஆயிரத்துக்கு கீழ் வருவாய் வரும் கோயில்கள் அனைத்தும் பட்டியலில் சேராத கோயில்கள் என பிரிக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் சேர்ந்த கோயில்கள் இணை ஆணையர் நிர்வாகத்தின் கீழும், பட்டியலில் சேராத கோயில்கள் உதவி ஆணையர் நிர்வாகத்தின் கீழும் வருகின்றன. தற்போது, 11 மண்டலங்களில் செயல்பட்டு வரும் 11 இணை ஆணையர்களின் நிர்வாகத்தின் கீழ் 5 ஆயிரம் கோயில்கள் உள்ளன. எஞ்சிய 35 ஆயிரம் கோயில்கள் அந்தந்த மாவட்ட உதவி ஆணையர்கள் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன.

இந்நிலையில், இணை ஆணையரின் கட்டுப்பாட்டில் 400 முதல் 500 கோயில்கள் வருகிறது.

அவர்களால், இந்த கோயில்களை கண்காணிக்க முடியாத நிலையில், நிர்வாக குளறுபடி, வாடகை நிலுவை வசூலிப்பதில் தாமதம், வருவாயில் முறைகேடு உள்ளிட்ட சம்பவங்கள் அரங்கேறுவது தொடர்கதையாகி வந்தது. இதை தொடர்ந்து மாநிலம் முழுவதும் மேலும், புதிதாக 9 இணை ஆணையர்கள் அலுவலகங்கள் உருவாக்கி கமிஷனர் பிரபாகர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, புதிதாக சென்னை-2, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி மண்டல இணை ஆணையர்கள் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்களில் வருவாய் மாவட்டங்களில் பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, காஞ்சிபுரத்தில், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு வருவாய் மாவட்டம், திருவண்ணாமலை மண்டலத்தில் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டங்கள், தூத்துக்குடி மண்டலத்தில் தூத்துக்குடி, தென்காசி, கடலூர் மண்டலத்தில் கடலூர், அரியலூர், திண்டுக்கல் மண்டலத்தில் திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டம் (உசிலம்பட்டி, பேரையூர் வருவாய் வட்டங்கள் மட்டும்) என ஒவ்வொரு மண்டலங்களில் வருவாய் மாவட்டங்கள் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, கூடுதலாக 9 இணை ஆணையர் பணியிடங்களை அறநிலையத்துறை ஏற்படுத்தியதால் 300 கோயில்களாக குறையும் என்று அறநிலையத்துறை அதிகாரி தெரிவித்தார்.

நடப்பு செமஸ்டர் தேர்வுகள் ஆன்லைனில் நடத்தப்படும்

அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு

சென்னை, டிச.25: நடப்பு செமஸ்டர் தேர்வுகள் ஜனவரி மாதம் ஆன்லைனில் நடத்தப்படும் என அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் வெங்கடேசன், அனைத்து உறுப்பு கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான எழுத்துத் தேர்வுகள் 2021 ஜனவரி மாதம் ஆன்லைன் வாயிலாக நடைபெறும். தேர்வில் சம்பந்தப்பட்ட மாணவர்கள்தான் கலந்துகொள்கிறார்களா என்பதை அவர்களின் அரசு புகைப்பட அடையாள அட்டை அல்லது கல்லூரி அடையாள அட்டையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இதுதொடர்பாக மண்டல அலுவலகத்துடன் கல்லூரிகள் தொடர்பில் இருக்க வேண்டும். ஆன்லைனில் நடைபெறும் தேர்வுகளில் 20 மாணவர்களுக்கு 1 கண்காணிப்பாளர் வீதம் நியமிக்க வேண்டும்.

தேர்வு குறித்த கால அட்டவணை விரைவில் அண்ணா பல்கலைக்கழகத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

बैंक ऑफ़ बड़ौदा
பேங்க் ஆப் பரோடா

எழும்பூர் கிளை :
எண். 123, R.L. சாலை, துகார் டவர்ஸ்,
எழும்பூர், சென்னை - 600 008.

Ph : 044 -28544242 / 28554377 / 28553482. Email : egmore@bankofbaroda.co.in

ஏல விற்பனை அறிவிப்பு - விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

கீழே குறிப்பிட்டுள்ள வாகனங்கள் "எங்கு உள்ளதோ மற்றும் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில்" விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ளவர்கள் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% டேவணித் தொகையை Bank of Baroda Chennai என்ற பெயரில் கேட்புவரைவோலையாகவோ அல்லது வங்கியின் காசோலையாகவோ செலுத்தவேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலவிற்பனை முடிவில் 25% ஏலத்தொகையை உடனடியாக செலுத்த வேண்டும் மீதமுள்ள 75% ஏலத்தொகையை 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் செலுத்திய மொத்த தொகையையும் எவ்வித அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும். வெற்றி பெற்ற ஏலதாரரே வாகனத்தின் உரிமைப் பெயர் மாற்றத்திற்கான செலவீனங்கள்/கட்டணங்கள் + இதர செலவீனங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும். எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏலத்தை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ஏலத்தை ஒத்திவைக்கவோ வங்கிக்கு முழுமையான உரிமை உண்டு. விற்பனையானது வங்கி ஒப்புதலுக்கு உட்பட்டது.

வ. எண்	கடன்தாரர் பெயர்	வாகனம் தயாரிப்பு	வாகனம் பதிவு எண் / விபரங்கள்	குறைந்தபட்ச கேட்பு விலை ஏல உயர்வு தொகை	டேவணித் தொகை
1.	திரு.முகம்மது முசாமில்	Audi A4 35 TDI	Chassis Number WAUF48J700919 Engine no DES101818	ரூ.18,00,000/- ரூ.10,000/-	ரூ.1,80,000/-

ஏலம் நடைபெறும் இடம்: பேங்க் ஆப் பரோடா, எழும்பூர் கிளையில் 30.01.2021 அன்று மதியம் 2மணி முதல் மாலை 4 மணி வரை.

வாகனத்தைப் பார்வையிடும் நாள் 28.01.2021 அன்று காலை 11 மணிமுதல் 4மணி வரை. இடம்: எண். 2, கிருஷ்ணவேணி நகர், போரூர், சென்னை - 600 116

மேலும் ஏல நடவடிக்கைகள் பற்றிய விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகள் அறிய விருப்பமுள்ள ஏலதாரர்கள் தொலைபேசி : 044-28552244 அல்லது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மீட்பு நிறுவனத்தின் தொலைபேசி : 9840331314 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இடம் : சென்னை
தேதி : 24.12.2020

(வீனா கோகைன்)
உதவி பொது மேலாளர் / அதிகாரபூர்வ அதிகாரி
பேங்க் ஆப் பரோடா

திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான

₹25 கோடியிலான 10 கிரவுண்ட் நிலம் மீட்பு

- போலியாக பத்திரம் பதிவு செய்த பாமக பிரமுகர்
- கோயில் நிர்வாகம் சார்பில் நில அபகரிப்பு பிரிவில் புகார்

► திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமாக சிட்லபாக்கத்தில் மீட்கப்பட்ட 10 கிரவுண்ட் நிலம். அடுத்த படம்: ஆக்கிரமிப்பு செய்யப்படாமல் தடுக்கும் வகையில் தடுப்பு அமைக்கப்பட்டு அறிவிப்பு பலகை வைக்கப்படுகிறது.

சென்னை, டிச.25: திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமாக சிட்லபாக்கத்தில் உள்ள ₹25 கோடியிலான 10 கிரவுண்ட் நிலம் மீட்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிலத்தை அபகரிக்கும் வகையில் போலியாக பத்திரம் பதிவு செய்த பாமக பிரமுகர் மீது கோயில் நிர்வாகம் சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுபாட்டில் திருப்போரூர் கந்தசாமி கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு சொந்தமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளது. ஆனால், இந்த சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் இல்லாததை பயன்படுத்தி கொண்டு பலர் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், இக்கோயில் அலுவலராக சக்திவேல் பொறுப்பேற்ற பிறகு கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை மீட்க முயற்சி எடுத்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக தான் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பல நூறு கோடி மதிப்பிலான கோயில்கள் நிலங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த சிட்லபாக்கத்தில் திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான 10 கிரவுண்ட் நிலம் இருப்பது வருவாய்த் துறை ஆவணங்கள் மூலம் கோயில் நிர்வாகம் சார்பில் கண்டறியப்பட்டது. இதை தொடர்ந்து, நேற்று காலை 10 மணியளவில் போலீசார் ஒத்துழைப்புடன் கோயில் அலுவலர் சக்திவேல், சிட்லபாக்கம் வருவாய் ஆய்வாளர், நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் பட்டா எண் 2ல் சர்வே எண் 68/2 10 கிரவுண்ட் நிலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் நான்கு பக்கமும் எல்லைகளை அளந்து அந்த இடத்துக்கு சீல் வைத்தனர். தொடர்ந்து, அந்த இடம் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமானது என்று அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. இந்த சொத்தின் மதிப்பு ₹25 கோடி இருக்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், அந்த 10 கிரவுண்ட் நிலம் கடந்த 2008ம் ஆண்டு வரை கோயிலின் பெயரில் தான் இருந்துள்ளது. ஆனால், 2009ல் தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அந்த நிலங்கள் செட்டில்மென்ட் தருவது போன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு இந்த நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது போன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் கோயில் பெயரில் இருந்தும் தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகம் எந்தவித ஆய்வு செய்யாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, பல லட்சம் கைமாறியிருப்பதாகவும் தெரிகிறது. இது தொடர்பாக தாம்பரம் சார்பதிவளர் அலுவலகம் மீது கோயில் நிர்வாகம் சார்பில் பதிவுத்துறை ஐஜி அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலத்தில் முறைகேடாக போலி பத்திரப்பதிவு செய்துள்ள பாமக பிரமுகர் மீது நடவடிக்கை எடுக்ககோரி சென்னை மாநகர காவல்துறை நில அபகரிப்பு பிரிவில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கோயில் நிலம் தொடர்பாக போலி ஆவணம் ஏதும் பதிவு செய்யகக்கூடாது என்பது தொடர்பாகவும் தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது என்று கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

YES BANK

பதிவு அலுவலகம் : எஸ் வங்கி லிட்., ஒன் இன்டர்நேசனல் சென்டர்–டவர் 2, 15வது தளம், சேனாபதி பபட் மார்க், எல்பின்ஸ்டோன் (மே), மும்பை, மகாராஷ்டிரா–400013
தொலைபேசி: +91(22) 6669 9000, பேக்ஸ்: 91 (22) 2490 0314 CIN: L65190MH2003PLC143249
மின்னஞ்சல்: communications@yesbank.in, இணையதளம்: www.yesbank.in.

அசையா சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பிட்டு கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கும் வழங்கப்படும் அறிவிப்பாவது எஸ் வங்கி லிமிடெடுக்கு ("கடனீட்டு கடனீந்தோர்) அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(1)இன்படி நவம்பர் 6, 2020 நாளில் கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்து, கிரேட் யூனிசன் கான்ட்ராக்டர்ஸ் இந்தியா பி. லிட். மற்றும் அதன் இயக்குநர், அடமானதாரர் மற்றும் கடன்தாரர் கார்மேகம் செந்தில் குமார் ஆகியோரிடமிருந்து கடனீட்டு கடனீந்தோருக்குரிய நிலுவை டிசம்பர் 21, 2020 தேதிய இந்திய ரூபாய் 11,74,36,447.85 (ரூபாய் பதினொன்று கோடியே எழுபத்து நான்கு லட்சத்து முப்பத்து ஆறாயிரத்து நானூற்று நாற்பத்தேழு மற்றும் பைசா எண்பத்தைந்து மட்டும்) தொகையை ஆகஸ்ட் 31, 2019 முதலான அதற்குரிய மேற்கொண்டு வட்டிகள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து மீட்பதற்காக வெள்ளிக்கிழமை, ஜனவரி 29, 2021 அன்று "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படையில் மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. சொத்துகள் விவரம், நிர்ணய விலை இதற்கு குறைவாக சொத்துகள் விற்கப்படாது மற்றும் முன்வைப்புத்தொகை குறித்த விவரங்கள் இன்னும் குறிப்பிட்டு கீழே அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ கடனீடு வழங்கியோர்(கள்) பெயர்	சொத்து விவரம்	நிர்ணய விலை (இந்திய ரூபாய்)	முன்வைப்புத்தொகை (இந்திய ரூபாய்)
கிரேட் யூனிசன் கான்ட்ராக்டர்ஸ் இந்தியா பி. லிட். மேலும் அதன் இயக்குனர், அடமானதாரர் மற்றும் கடன்தாரர் கார்மேகம் செந்தில் குமார்	வடக்கு சென்னை பதிவு வருவாய் மாவட்டம் மற்றும் கொன்னூர் சார்பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள சர்வே எண் 219 இல் அடங்கிய, மனை எண்கள் 375/1 மற்றும் 375/2, பன்னீர் நகர், முகப்பேர், முகப்பேர் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 3600 சதுரடி பரப்பளவு நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி.	இந்திய ரூபாய் 3,68,00,000/– (ரூபாய் மூன்று கோடியே அறுபத்தெட்டு லட்சம் மட்டும்)	இந்திய ரூபாய் 36,80,000/– (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)

மின்–ஏலம் மூலமான அசையா சொத்துகள் விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:–

சொத்துகள் பார்வையிடல்: விருப்பமுள்ள நபர்கள் ஜனவரி 18, 2021 மற்றும் ஜனவரி 19, 2021 நாளில் காலை 10.30 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் சொத்துகளை பார்வையிடலாம். முன்வைப்புத்தொகை சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: வியாழக்கிழமை, ஜனவரி 28, 2021 மாலை 5.00 மணி வரை.

1. ஏல விற்பனை எஸ் வங்கி லிமிடெடின் அங்கீகார சேவை வழங்குனர், M/s. இ–ப்ரோக்யூர்மென்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் அதன் அலுவலக இடம் B–704–705, வால் தெரு II, ஓரியன்ட் கிளப் எதிரில், குஜராத் கல்லூரி அருகில், எல்லிஸ் பாலம், அகமதாபாத் 380 006, குஜராத். உதவி இணைப்பு எண்கள் 9978591888 ஜினேஷ்ஜாரிவாலா, மற்றும் உதவி இணைப்பு மின்னஞ்சல் முகவரி gujarat@auctiontiger.net, இணையதளம் https://sarfaesi.auctiontiger.net / ஆக்சன் டைகர் கைபேசி செயலி மூலம் "இயங்குதள மின்–ஏலம்/ஏலம் விடுதல்" நடைபெறும்.
2. ஏல விற்பனை வெள்ளிக்கிழமை ஜனவரி 29, 2021 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் நியமிக்கப்பட்ட கடைசி நேரத்துக்கு முன்பு கடைசி ஐந்து நிமிடங்களில் ஏலப்புள்ளி அளிக்கப்பட்டால் 5 (ஐந்து) நிமிடங்கள் தன்னிச்சை நீட்டிப்புடன் நடைபெறும்.
3. ஏலப்புள்ளி விலை அதிகாரப்பூர்வ அதிகாரியால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட நிர்ணய விலைக்கு மேல் இருக்க வேண்டும் மேலும் ஏலதாரர் இந்திய ரூபாய் 1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மடங்கில் தங்கள் விலைப்புள்ளியை மேற்கொண்டு உயர்த்த வேண்டும்.
4. சொத்துகள் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அமைக்கப்பட்ட நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்படாது. நிர்ணய விலைக்கு குறைவாக விலைக்குறிப்பிட்ட ஏலப்புள்ளி நிராகரிக்கப்படும் மேலும் செலுத்திய முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும்.
5. வெற்றிகர ஏலதாரர் மின்–ஏலம் விற்பனை செயல்பாடுகள் முடிவடைவதன் 24 மணி நேரத்திற்குள் ஏற்கனவே செலுத்திய (முன்வைப்புத்தொகை உட்பட) கொள்முதல் தொகையின் 25% தொகை செலுத்தப்பட வேண்டும். கொள்முதல் விலையின் மீதி 75% வங்கியால் விற்பனை உறுதியானதன் 15 (பதினைந்து) நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியின் தனி விருப்ப முடிவில் மற்றும் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் கொள்முதலாளரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட/வைப்பு செலுத்திய தொகைகளை வங்கி கைக்கொள்ளும்.
6. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளை சமர்ப்பிக்கும் முன்பு ஏலப்புள்ளி படிவங்கள் மற்றும் விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேற்கூறிய இணையதளம் https://www.yesbank.in/about-us/media/auction-property கண்டு ஏல நடவடிக்கையில் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. ஏலப்புள்ளிகள் முறையாக நிரப்பப்பட்ட உரிய விவரங்களுடன் வரையறுக்கப்பட்ட மாதிரி(களி)யில் இயங்குதளத்தில் மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏதேனும் பிற மாதிரி முறையில் சமர்ப்பித்த ஏலப்புள்ளிகள்/நிரப்பப்படாத ஏலப்புள்ளிகள் நிராகரிப்புக்குட்படும்.
8. அனைத்து ஏலப்புள்ளி படிவங்களும் பின்வரும் KYC ஆவணங்களின் பிரதிகளால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும் அவையாவன (i) பான் அட்டை (ii) ஆதார் அட்டை/கடவுச்சீட்டு (iii) நடப்பு முகவரி சான்று (iv) செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரி (v) தொடர்பு எண்/கள் (கைபேசி/தரைவழி இணைப்பு), ஏனையவை. மேற்கூறிய ஆவணங்களின் ஸ்கேன் செய்த பிரதிகள் மேலே தெரிவிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இணைக்கப்பட்ட விற்பனை அறிவிப்பில் விவரிக்கப்பட்ட ஒவ்வொரு சொத்துக்கு எதிராக குறிப்பிட்டவாறு முன்வைப்புத்தொகை (EMD) ஆனது இயங்குதளத்தில் ஏலப்புள்ளிகள் சமர்ப்பிக்கும் முன்பு RTGS/NEFT/பண பரிவர்த்தனை மூலம் பின்வரும் கணக்குக்கு செலுத்தப்பட வேண்டும்:–

குறிப்புகள்	விவரங்கள்
வங்கி & கிளை பெயர்	எஸ் வங்கி லிமிடெட் & நேரு மையம், மும்பை.
பயனாளி பெயர்	BB CAD மும்பை – உள்ளக கணக்கு
கணக்கு எண்	000189900001840.
IFSC குறியீடு	YESB0000001.

9. திட்டமிடும் ஏலதாரர் வங்கியால் ஏற்கத்தக்கவாறான வடிவில் வங்கிக்குரிய முன்வைப்புத்தொகையை செலுத்திய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. கடனீட்டு கடனீந்தோர்/சேவை வழங்குவோரிடமிருந்து அனைத்து உரிய தகவலும் மின்னஞ்சல் மூலம் மட்டும் தெரிவிக்கப்படும் என்பதால் ஏலதாரர்கள் செயல்பாட்டிலுள்ள மின்னஞ்சல் முகவரி கொண்டிருக்க வேண்டும்.
11. எதிர்நோக்கும் திட்டமிடும் ஏலதாரர்கள் மின்–ஏலத்தில் பங்கேற்பதன் மீதான இயங்குதள/நேரிடை பயிற்சி பெறுவதற்கு மேற்குறிப்பிட்ட விவரித்திலான சேவை வழங்குனரை தொடர்பு கொள்ளலாம்.
12. இருந்தபோதும், அதிகாரப்பூர்வ அதிகாரியோ அல்லது கடனீட்டு கடனீந்தோரோ அல்லது சேவை வழங்குனரோ தொழிற்நுட்ப கோளாறுகள்/மின்வெட்டு, ஏனையவைக்கு பொறுப்பாகாது.
13. வெற்றிபெறாத ஏலதாரர்களின் முன்வைப்புத்தொகை மின்–ஏலம் செயல்பாடுகள் முடிவுறும் தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் திருப்பி அளிக்கப்படும்.
14. விற்பனை வங்கியின் ஒப்புதலுக்கு உட்பட்டது. கடன்தாரர்/ஜாமீன்தாரர்(கள்) மின்–ஏலம் நிர்ணயிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு முன்பு கடனீட்டு கடனீந்தோரின் முழு நிலுவைத் தொகையை செலுத்தி விட்டால், விற்பனை நடத்தப்படாது.
15. அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், மேற்கூறிய சொத்துகள் மீது பிற வில்லங்கங்கள் இல்லை. இருந்தபோதும் எதிர்நோக்கும் ஒப்பந்ததாரர்கள் பத்திரம்/வில்லங்கம் ஏனையவை குறித்து தங்கள் சொந்த முயற்சியை மேற்கொள்ள மேலும் தனிப்பட்ட விசாரணைகளை நடத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். அதிகாரப்பூர்வ அதிகாரி மேற்கூறிய அடமான சொத்து தொடர்பாக அரசு மற்றும் யாருக்கேனும் உரிய ஏதேனும் வரிவிதிப்பு பாத்தியதை, வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது ஏதேனும் பிற நிலுவைகளுக்கு பொறுப்பேற்க மாட்டார். சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு தெரிந்ததோ அல்லது தெரியாததோ அனைத்து நடப்பிலான மற்றும் எதிர்கால வில்லங்கங்களுடன் விற்பனை செய்யப்படுகின்றன.
16. அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த காரணத்தையும் கூறாமல் ஏதேனும் ஒப்பந்தப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளிகளை (ஏதேனும் சொத்துக்கானது) நிராகரிக்க அல்லது மின்–ஏலத்தை ரத்து செய்யவும் உரிமை கொண்டுள்ளார்.
17. விற்பனை விதிமுறைகளுக்கு உடன்பட்டு, அதிகாரப்பூர்வ அதிகாரி கொள்முதலாளர் பெயரில் 'விற்பனை சான்றிதழ்' ஒன்று வழங்குவார். முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம், மதிப்புகூட்டு வரி, மூலத்தில் வரி பிடித்தம், சரக்கு சேவை வரி ஏனையவை தொடர்பான அனைத்து செலவுகளும் கொள்முதலாளரால் ஏற்கப்பட வேண்டும்.
18. விற்பனை சர்பாசி சட்டம்/விதிகள் 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
19. சொத்துகளை பார்வையிடுதல் உட்பட, ஏலம் குறித்த அனைத்து மேற்கொண்டு தகவலுக்கு, திட்டமிடும் ஒப்பந்ததாரர்கள் திரு. புரோசென்ஜித் மஹாதோ அவர்களை +91 9167208012 எண்ணில் அல்லது திரு. சாகர் முலே அவர்களை +91 9619899386 எண்ணில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

நாள்: 23.12.2020
இடம்: மும்பை

ஒம்/- புரோசென்ஜித் மஹாதோ
(அதிகாரப்பூர்வ அதிகாரி)
எஸ் வங்கி லிமிடெட்

அனல்மின் நிலையங்களின் பாதுகாப்பு குறித்த ஆய்வை

மத்திய நிலக்கரி, மின்துறை அமைச்சகங்கள் மேற்கொள்ள வேண்டும்

தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவு

சென்னை, டிச.25: இந்தியா முழுவதும் உள்ள அனல்மின் நிலையங்களின் பாதுகாப்பு குறித்த ஆய்வை மத்திய நிலக்கரி மற்றும் மின்சாரத்துறை அமைச்சகங்கள் 6 மாதத்திற்குள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் வழக்கை முடித்து வைத்தது.

என்.எல்.சி. விபத்துகள் குறித்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்தது. ஆயுட்காலம் முடிந்த பின்னரும் அனல் மின்நிலைய அளவுகளை இயக்கி வந்த காரணத்தால்தான் தொடர்ச்சியாக விபத்துகள் ஏற்படுவதால் இந்த அனல்மின் நிலைய அலகுகளை மூடுவதற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி சென்னையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் கே.ஆர்.செல்வராஜ் குமார் என்பவரும் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்திருந்தார். இந்த வழக்கில் விபத்து குறித்து ஆராய அமைக்கப்பட்ட நிபுணர் குழு அண்மையில் தனது விசாரணை அறிக்கையை சமர்ப்பித்து இருந்தது.

அதில், அனல்மின் நிலைய கொதிகலனை தூய்மைப்படுத்துவதற்கு தனித்த வழிகாட்டு நெறிமுறைகள் இல்லை. பாதுகாப்பு நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என கூறப்பட்டிருந்தது. இதை பரிசீலித்த தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் ஏ.கே.கோயல் தலைமையிலான முதன்மை அமர்வு அளித்த தீர்ப்பில் நடந்த விபத்திற்கு என்.எல்.சி. நிர்வாகமே பொறுப்பு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அனைத்து அனல்மின் நிலைய அலகுகளும் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும். அடுத்த 6 மாதத்திற்குள் இந்தியா முழுவதும் உள்ள அனல்மின் நிலையங்களின் பாதுகாப்பு குறித்த ஆய்வை மத்திய நிலக்கரி மற்றும் மின்சாரத்துறை அமைச்சகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி வழக்கை முடித்து வைத்தனர்.